Regsitered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு வைகாசி மீ 18 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 3 (01 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 159

A/L 89
விஞ்ஞானம்
பௌதிகம் — சௌந்தி
இரசாயனம் — செல்வா
விலங்கியல் — ஞானம்
தாவரவியல் — பாலா
தூய, பிரயோக கணிதம் —
A. பத்மநாதன்.
Niru Tuition
Centre
KONDAVIL

A/L 89 கலை, வர்த்தகம்
பிரிவு II ஆரம்பமாகின்றன
O/L, 10, 9, 8, 7, 6,
5 ஆம் ஆண்டுகளுக்கான
தனித்துவம்மிக்க ஆசிரியர்
களின் ஒருங்கிணைந்த
சேவை.
நிரு டியூசன்
சென்றர்
கோண்டாவில்.

டிக்ஸிற் கூறுகிறார்

## குடாநாட்டில் நடப்பது இந்தியாவுக்கு தெரியும்

### 4 ஆயிரம் அடி உயரே இருந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை

கொழும்பு, ஜூன் 1

யாழ் குடாவில் என்ன நடைபெறுகின்றது என்பது இந்தியாவுக்கு நன்ருகத் தெரியும். அதை நான்காயிரம் அடி உயரத்தில் இருந்து நாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்தார்.

யாழ் குடாவைச் சுற்றிப் பார்வையிட வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை இந்தியத் தூதரகம் நிராகரித்து விட்டது என்று வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீது விடுத்த அறிக்கைக்குப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அதிக உயரத்திலிருந்து குடா நாட்டைப் பார்த்தோம்

### சண்டை நடப்பதும் தெரியவில்லை செய்தியாளர் ஒருவர் தகவல்

கொழும்பு, ஜூன் 1

அதிக உயரத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்து யாழ் குடா நாட்டைப் பார்க்க நாம் அனுமதிக்கப்பட்டோம். கீழே இறங்க அனுமதிக்கப்படவில்லை.

யாழ்குடாவுக்கு அரசு அதிகாரிகளினல் அழைத்துவரப்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்களில் ஒருவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அதிக உயரத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்து பார்த்தோம். கீழே சண்டை நடைபெறுவதை நாம் காணமுடியாதிருந்தது.

இப்படி அச்செய்தியாளர் மேலும் சொன்னர் என்று பி. பி.சி நேற்று அறிவித்தது.

வெளிநாட்டுச் செய்தியாளருக்கு முதலில் பலாலி இராணுவ முகாமில் வைத்து இராணுவ அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். (இ-எ)

## 'மேனிமினுக்கு' பிரசார தந்திரம் குறித்து இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஜூன் 1

இராஜதந்திரிகள், செய்தியாளர்களை ஹெலிக்கொப்டரில் அழைத்துச்சென்று யாழ் குடாநாட்டைக் காட்டிய செயல், இலங்கை அரசின் 'மேனி மினுக்கு' (Cosmetic propaganda) பிரசாரத் தந்திரமாகும்.

இந்தத் தந்திரத்துக்கு இந்தியா உடந்தையாக இருக்க விரும்பவில்லை.

-இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

4 ஆயிரம் அடி உயரத்தில் இரண்டு இராணுவ ஜெனரல்களின் விளக்கத்துடன் ஹெலிக்கொப்டரில் இந்த இராஜதந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தாக்குதல் தீவிரமானது குறித்து இந்தியா ஏமாற்றம்

புதுடில்லி, ஜூன் 1

யாழ் குடா நாட்டில் இலங்கை அரசு இராணுவத் தாக்குதல்களைத் தீவிரமாக்கியிருப்பது குறித்து இந்திய அரசு ஏமாற்றம் அடைந்துள்ளது.

இப்படி புதுடில்லி அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

பிரதமர் ராஜீவ்காந்தி தாக்குதலை நிறுத்தும்படி கோரியும்கூட இலங்கை அரசு தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

யாழ் குடா மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம்,

(2 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் சம்பவமும் காரணம்:

## இந்திய பாதுகாப்பு கொள்கை மீண்டும் மதிப்பீடு செய்யப்படும் நிலையில்

புதுடில்லி, மே 31

பாகிஸ்தான் நவீன ஆயுதங்களைப் பெறுவதும் இலங்கை அரசு தற்போது யாழ் குடாநாடு மீது நடத்தி வரும் தாக்குதலும் இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கையை மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது,

இப்படி இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த் தெரிவித்தார்.

ரேபரேலியில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினர்.

இந்தியாவைப் பலவீனப்படுத்தும் முயற்சிக

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது இந்தியா இராணுவத் தடைவேலி அமைக்கக் கோரிக்கை

சென்னை, ஜூன் 1

கடல், நிலப்பகுதியில் இராணுவத் தடைவேலி ஒன்றைப் போட்டு யாழ் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கிடைக்கச் செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த வேண்டுகோளை லோக்தள் கட்சியின் தமிழ் நாடு பிரிவுத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

★ ஈழத் தமிழரை காப்பாற்றக் கோரி

# தமிழகத்தில் இன்று ரயில் மறிப்புப் போர்

சென்னை, ஜூன் 1

ஸ்ரீலங்கா அரசு இராணுவம் நடத்தி வரும் இன ஒழிப்பிலிருந்து ஈழத் தமிழர்களைக் காப்பாற்றக் கோரி இன்று சென்னையில் ரயில் மறிப்புப் போராட்டம் நடக்க இருக்கிறது.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியன இப் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்து உள்ளன.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியுள்ள தமிழரைக் காப்பாற்றும்படி மத்திய அரசை வலியுறுத்துவதற்காகவே இந்த ரயில் மறிப்புப் போராட்டம் நடத்தப்படுகின்றது. (அ—எ)

### வடமராட்சியில் 200க்கும் அதிகமானேர் பலி:

# பொதுமக்களைத் தஞ்சம் அடைய கோரிய இடங்களிலும் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 1

பொதுமக்களை தஞ்சமடையுமாறு கோரிய பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள் மீது பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன்காரணமாக ஆலய தர்மகர்த்தாக்கள் உட்பட இருநூற்றுக்கும் அதிகமான பொது மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறை, நெல்லியடி, கெருடாவில், உடுப்பிட்டி, பொலிகண்டி ஆகிய பகுதிகளில்உள்ள கடைகள், வீடுகள், ஆலயங்கள், மடங்கள், படமாளிகைகள் அனைத்தும் குண்டு வீச்சு விமானங்களினலும் புல்டோசர்களினலும் அழிக்கப்பட்டுள்ளன.

## வெள்ளைக் கொடிஏற்றிய கோவிலும் தப்பவில்லை

— உதயன் செய்தியாளர் : க. இரத்தினராஜசிங்கம் —

தொண்டமானற்றில் இருந்து கால் நடையாக யாழ் வந்து சேர்ந்த வீரமாகாளி அம்மன் ஆலய குருக்கள் சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாம் கண்டவை-அறிந்தவை பற்றி அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் தாக்குதல் ஆரம்பமான தினமான கடந்த26ஆம்திகதி நான் தொண்டமானற்றில் இருந்த பொழுது பத்து ஹெலிக்கொப்டர்கள், நான்கு குண்டு வீச்சு விமானங்கள், யாழ்ப்பாணம் நோக்கி பறந்து செல்வதை அவதானித்தேன்.

இதே வேளை வல்வெட்டித்துறை, தொண்டமானறு பகுதிகளில் இருந்து பலத்த வெடிச்சத்தங்களுடன் இராணுவத்தினர் வெளியேறி போராளிகளுடன் மோதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

மோதல் ஒருபுறம் இருக்க குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

---

### சுபநேரம்

01-06-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
11.52 முதல் 1.22 வரை
ராகுகாலம்:-
7.22 முதல் 8.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சேக்கிழார் நாயனர் குருபூஜை

---

### இந்திய கம்யூனிஸ்ட் வேண்டுகோள்

புதுடில்லி, மே 31

யாழ் குடாநாடு மீதான இராணுவ தாக்குதலை நிறுத்தும்படி இலங்கை அரசின் மீது நிர்ப்பந்தம் செலுத்தும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-எ)



நான் ஒண்டு சொல்லுறேன். சாப்பாட்டுக்காக சுதந்திரத்தை விலைபேசினல் நாங்கள் இப்பிடியே அடிமையளாய் இருக்க வேண்டியதுதான்......

### வடமராட்சி தவிர்ந்த ஏனைய இடங்களில்

# 11 மணி நேரத்துக்கு ஊரடங்கு இன்று தளர்வு

## ஆனையிறவு தடைமுகாமிலிருந்து லொறிகள் வரவும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ் குடாநாட்டில் நேற்றுக் காலை 10.00 மணி முதல் மீண்டும் அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்குதளர்த்தப்படும்.

6.00 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் மாலை 5.00 மணிக்கே மீண்டும் அமுலுக்கு வரும்.

ஆனல் வடமராட்சிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படமாட்டாது. இன்றும் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

ஆனையிறவு தடைமுகாமில் கடந்த 5 நாட்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள லொறிகளும் பயணிகள் வாகனங்களும் இந்த பதினெரு மணி நேர ஊரடங்குத் தளர்வு நேரத்துக்குள் யாழ்ப்பாணத்துக்குள் வர அனுமதிக்கப்படும் என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது.

ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள லொறிகளையும், பயணிகள் வாகனங்களையும் யாழ் குடா நாட்டுக்குள் அனுமதிக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், கூட்டுப்படைத் தளபதி திரு. சிறில் ரண[illegible] தொலைபேசி மூலம் கேட்டிருந்தார்.

காங்கேசன் துறைமுக உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள் தேவையான பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள், தமது கட்டளைகளுடன் இன்று யாழ். செயலகத்தில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ் பற்குணத்தைச் சந்திக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் 200 பேர் பலி!

சென்னை, ஜூன் 1

இதுவரை நடந்த மோதல்களில் 12 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர்.

இராணுவத் தரப்பில் 200 வரையில் உயிரிழந்தனர்.

-இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள்பேச்சாளர் சென்னையில் தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழரை இராணுவம் பிடித்து வைத்துள்ளது என்றும் அப் பேச்சாளர் சொன்னர். (உ-எ)

## மந்திகை ஆஸ்பத்திரியில் சடலங்கள் அழுகுகின்றன!

யாழ்ப்பாணம், ஜூன் 1

மந்திகை ஆஸ்பத்திரியில் பல சடலங்கள் கிடந்து நாற்றமெடுக்கின்றன என்று தெரியவருகிறது.

வடமராட்சிப் பகுதியில் இராணுவ அட்டகாசத்தினல் உயிரிழந்த பலரது சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி பலரும் ஊரை விட்டு ஓடியதால் சடலங்கள் அடையாளம் காணப்படாமல் கிடந்து அழுகுகின்றன.

இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிகளிலும் பலரது சடலங்கள் அழுகிய நிலையில் கிடக்கின்றன என்றும் கூறப்படுகிறது. (இ-10)

## வதிரி ஆலயம் அருகில் 17 பொதுமக்கள் பலி என்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 1

ஸ்ரீலங்கா அரசுப் படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் வதிரியில் உள்ள ஆலயம் ஒன்றின் அருகில் 17 பொது மக்கள் உயிரிழந்தனர்.

அவர்களின்சடலங்கள் சிதறிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

இப்பொதுமக்கள் உயிரிழந்த செய்தியை இராணுவத்தினர் உறுதிசெய்திருப்பதாக இலங்கை வானெலி நேற்று அறிவித்தது.

அந்த ஆலயத்தைப் பயன்படுத்திவந்த தீவிரவாதிகள் மீது பாதுகாப்புப் படையினர்நடத்திய தாக்குதலில் இவர்கள் உயிரிழந்தனர் என்றும்-

இவர்கள் உயிரிழந்ததற்குக் காரணம் தீவிரவாதிகளின் மோட்டார் தாக்குதலா? அல்லது படையினரின் விமானத் தாக்குதலா? என்பதை தங்களால் சொல்லமுடியாதிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்-

இப்படி இலங்கை வானெலி மேலும் நேற்று அறிவித்தது. (இ-எ)

## உண்ணுவிரதிகள் ஐவர் திருச்சியில் கைது!

திருச்சியில் சாகும் வரை உண்ணுவிரதம் மேற்கொண்டு வந்த ஐந்து இலங்கைத் தமிழ்ப் பெண்கள் நேற்று பொலீஸாரினல் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் திருச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கைத் தமிழரைப் படுகொலையில் இருந்து காப்பாற்ற நேரடி நடவடிக்கை எடுக்குமாறு கோரி இப் பெண்கள் சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டு வந்தனர். (உ-எ)

## ராணுவ ரீதியில் தலையிட ராஜீவிடம் கோரிக்கை

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இராணுவ ரீதியில் தலையிடும்படி பிரதமர் ராஜீவ் காந்தியை உலகத் தமிழ் இளைஞர் சம்மேளனம் கோரியிருக்கின்றது.

சம்மேளனத் தலைவர் டாக்டர் டி.ஆர்.ஜனர்த்தனன் இது சம்பந்தமாக பிரதமர் காந்திக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறர்.

மிருகத்தனமான தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் அத் தந்தியில் கோரப்பட்டுள்ளது. (உ-எ)

## இலங்கைப் பிரச்சினை; ரஷ்யப் பிரமுகருடன் ராஜீவ் பேச்சு

புதுடில்லி, ஜூன் 1

இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், வெளிவிவகார அமைச்சர் என். டி. திவாரியும் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற் கமிட்டித் தலைவர் அனடெலி டொப்ரினினுடன் ஆராய்ந்தனர்.

ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகராக திரு. டொப்ரினின் பணி புரிகிறர்.

ரஷ்யத் தலைவரின் விசேட பிரதிநிதியாக அவர் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார்.

இந்திய அரசு, ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் அழைப்பை ஏற்று புதுடில்லிக்கு 8 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர்வந்தார்.

இந்தியாவைச் சூழ்ந்துள்ள ஆபத்துக்களில் இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிட்டு வருவதும் ஒன்று என்று திரு. டொப்ரினினுக்கு இந்திய அமைச்சர்களினல் எடுத்து உரைக்கப்பட்டது.

## முகாமுக்கு வருமாறு அரச ஊழியருக்கு அழைப்பு விடுப்பு

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த அரச ஊழியரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத வேளைகளில் தொண்டமனறு இராணுவ முகாமுக்குச் சமூகமளிக்கும்படி 'யாழ்ப்பாண வானெலி' நேற்று கேட்டுக்கொண்டது.

உணவுப் பொருள் விநியோக அலுவல்களை மேற்கொள்ள அவர்கள் வருகைதரவேண்டும் என்றும் அந்த வானெலி மேலும் அறிவித்தது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## உண்மை விளம்புதல்

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது ஆறு நாள் நடத்தப்பட்ட போரின் விளைவுகளை வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் அரசாங்கம் சனிக்கிழமை காண்பித்தது.

ஆயிரக்கணக்கான அடி உயரத்தில் இருந்து யாழ் குடாநாட்டின் யுத்த விளைவுகளைப் பார்த்தவர்களில் அமெரிக்கா, பாகிஸ்தான், பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், கனடா ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகளும் அடங்குவர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது சொந்த மக்கள் எனக் கூறிக்கொள்ளும் தமிழ் மக்களை பச்சைப் படுகொலை செய்வதாகவும், மனித உரிமைகளை மீறும் விதத்தில் போர் அட்டூழியம் புரிவதாகவும் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துக்கூறும் விதத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் அல்லவா?

அந்த அறிக்கையைப் பொய்ப்பிக்கும் முயற்சியே ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த ''வானக் காண்பித்தல்'' ஆகும்!

ஸ்ரீலங்கா அரச படைகள் புரிந்த அரக்கச் செயல்களை, அசுரக் கொடுமைகளை வானத்தில் இருந்து எப்படி அறிந்துகொள்ள முடியும்?

ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் குண்டு வீசித் தாக்கப்பட்டதை விமானத்தில் இருந்து பார்த்து அறியமுடியுமா? அல்லது ஷெல்லாலும், குண்டு வீச்சாலும் நாசமாகிய வீடுகளைத் தான் அங்கிருந்து பார்க்க முடியுமா?

அரச படைகளின் அட்டூழியத்துக்கு இரையான தமிழ் மக்களின் சடலங்களையாவது அங்கிருந்து காண முடியுமா? கணக்கிடுவது தான் ஆகக் கூடுமா?

தமிழர் பிரச்சினை விவகாரத்தில் ஆரம்பந்தொட்டே பொய்யும், புனைகதையும் புளுகுரையும் கூறி உலகை ஏமாற்றி வருவது ஸ்ரீலங்கா அரசு. யாழ் குடாநாட்டு விடயத்தில் இந்தியா உண்மை நிலையை உலகுக்குக் கூறிவிட்டதே என்ற பதற்றத்தில் ''வானக் காண்பித்தலுக்கு'' ஏற்பாடு செய்திருக்க வேண்டும்!

பொய் சொல்லியே பழக்கப்பட்டவன் வாயில் மெய் என்பதை மருந்துக்குத் தானும் எதிர்பார்க்க முடியாது!

ஸ்ரீலங்கா அரசு தனது பொய்யை உறுதிப்படுத்தி அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்காக யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வந்தவர்களில் அனேகர் அதன் ஆத்ம நண்பர்கள். ஆகையால் உலகம் அவர்கள் வழங்கும் அத்தாட்சிப் பத்திரங்களை ஏற்கவேண்டும் என்பதல்ல!

யாழ்.யுத்தத்தின் அனர்த்தங்களை அறிவதற்குத் தரையால் வந்து பார்க்க வேண்டும். எவரும் வந்து பார்க்கலாம். அதனைத் தமிழ் மக்கள் தடுக்க மாட்டார்கள்.

ஏற்பாடு செய்யப்பட்ட 'காண்பித்தல்கள்' எப்போதும் ஏற்பாடு செய்தவர்களுக்கே சாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அது உண்மையான உண்மை விளம்புதல் ஆகாது.

உண்மை அறிய விரும்பும் உலக நாடுகளின் பிரதிநிதிகள் உடனடியாக தரையால் வந்து நிலைமையை அறிந்து செல்லக் கோருகிறோம்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

இந்தப் பொய்யாமொழியின் மகத்துவத்தை ஸ்ரீலங்கா அரசு உணராவிட்டாலும் உலக நாடுகள் நிச்சயம் உணரும் என நம்புகிறோம்.

# திட்டமிட்ட படுகொலையிலிருந்து யாழ் தமிழரை காப்பாற்றுங்கள்

## பிரசைகள் குழு ராஜீவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ் குடா தமிழரை திட்டமிட்ட படுகொலையில் இருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணம் பிரசைகள் குழு இந்தியப் பிரதமரையும் தமிழ் நாடு முதலமைச்சரையும் வேண்டியுள்ளது.

யாழ் பிரசைகள் குழு இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை பிரதமர் ராஜீவ் காந்திக்கும் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

பிரதமர் ராஜீவுக்கு அனுப்பி வைத்துள்ள தீர்மானம் வருமாறு:

கடந்த சில தினங்களாக யாழ் குடாநாட்டில் தமிழர்கள் கொல்லப்படும் விதம் குறித்து பிரசைகள் குழு அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றது.

மக்கள் தஞ்சம் புகுந்த இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வணக்க ஸ்தலங்கள் கூட இத்தாக்குதலில் விட்டுவைக்கப்படவில்லை.

25-5-87 இல் சுதுமலை அம்மன் ஆலயத்தின் கொடியேற்ற விழாவின் போது நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் பூசகர் உட்பட சிலர் கொல்லப்பட்டனர்.

26-5-87 இல் யாழ் சென் ஜேம்ஸ் தேவாலயம் குண்டு வீச்சுக்கு இலக்கானது.

27-5-87 இல் வண்ணை சிவன்கோயில் மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் வண்ணை பெருமாள் கோயில் மயிரிழையில் தப்பியது.

நல்லூர் கந்தசாமி கோயில் மீது குண்டு வீசப்பட்டது. இலக்குத் தவறி வைரவர் ஆலயத்தைத் தாக்கியது.

ஜும்மா பள்ளி வாசலும் தாக்கப்பட்டது.

ஆலயங்களும் பாடசாலைகளும் சேதம் அடைந்தன. வர்த்தக நிலையங்கள், வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. ரசாயனக் குண்டுகளும் பாவிக்கப்பட்டன.

பொருளாதார முற்றுகை காரணமாகவும் தொடர்ந்து வரும் ஊரடங்குச் சட்டம் காரணமாகவும் குடாநாட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

விசேடமாக குழந்தைகளுக்கான உணவுவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்திய அரசின்வேண்டுகோளையும் மீறி இலங்கை அரசு இப்படியான தாக்குதல்களை ஏன் நடத்துகின்றது என்பதை குழுவினால் விளங்கிக் கொள்ள முடியாமல் உள்ளது.

இலங்கை தனது இராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

தொடர்ந்து இடம்பெறும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படி அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

யாழ் பிரசைகள் குழு முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கு அனுப்பிய தீர்மானத்தில் விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களில் இருந்து தமிழரைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்திய மத்திய அரசைத் தூண்டும் நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (இ—எ—7)

## ராணுவ நடவடிக்கை எப்போது நிற்கும்?

### படைத் தளபதி விளக்கம்

கொழும்பு, ஜூன் 1

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைக் கொன்றவுடன் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுவிடும்.

— இப்படி கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க கொழும்பில் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

அடுத்த 48 மணி நேரத்தில் —

பருத்தித்துறைப் பகுதியில் முகாமிட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைக் கொன்றவுடன் — இராணுவ நடவடிக்கைகள் அனைத்துமே நிறுத்தப்பட்டுவிடும்.

இதுவரை நடந்த மோதல்களில் இராணுவ தரப்பில் 29 பேர் உயிரிழந்தனர். 163 பேர் காயமடைந்தனர்.

— இப்படி ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி மேலும் அறிவித்தது. (உ—எ)

## காங்கேசன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் நிரந்தர ஊழியர்களின் சம்பளக் காசோலைகள் ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில் சுன்னாகம் ''லயன்ஸ் கிளப்'' மண்டபத்தில் வைத்து காலை 8 மணி முதல் வழங்கப்படும்.

காசோலைகளை வழங்குவது இன்று முதல் தொடர்ந்து தளர்த்தப்படும் 3 நாட்களுக்கு வழங்கப்படும் எனவும் சிமெந்துக்கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-7)

## ● வடமராட்சி மக்களுக்கு முன்னுரிமையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகி இருப்போர் வடமராட்சி மக்களே. எனவே அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

முக்கூட்டுப் படைகளின் தளபதி சிறில் ரணதுங்கா யாழ். அரச அதிபரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நேற்று யாழ். செயலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட யாழ் அரச அதிபரிடம் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## நிவாரண உதவிகள் சகலருக்கும் வழங்க

### அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

இடம் பெயர்ந்தோருக்கு மட்டுமல்லாமல் அன்றுட கூலிவேலைக்குச் செல்பவர்களுக்கும் தனியார் கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுபவர்களுக்கும் அரசு நிவாரணம் வழங்க வேண்டும். -இவ்வாறு யாழ் அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமே நிவாரணப் பொருள்களை வழங்க அரசு முன்வந்ததையடுத்து ஏனையோருக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும் என அரச அதிபர் இராணுவ அதிகாரிகள் ஊடாக வேண்டுகோள் விடுத்தார்.

அரசஅதிபரின் கோரிக்கை அதிகாரிகளின் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-10)

## காயமடைந்தோர் சிகிச்சை இன்றி அவதிப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடமராட்சியில் காயமடைந்த பல பொது மக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் தொடரும் மோதல்கள் காரணமாக வைத்தியசாலைகளின் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களை யாழ்ப்பாண வைத்தியசாலைக்கோ அல்லது வேறு வைத்தியசாலைக்கோ கொண்டு செல்ல முடியாத நிலைமையும் இருந்து வருகின்றது. (இ-10)

## ✯ ராஜீவை பழனியாண்டி சந்திப்பார்

சென்னை, மே 31

இலங்கைத் தமிழருக்கு விரைந்து உதவுமாறு பிரதமர் ராஜீவ் காந்தியை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொள்ள தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் எம். பழனியாண்டி புதுடில்லி செல்ல இருக்கின்றார்.

சின்னஞ்சிறு விளம்பரம்

அறிவித்தல்

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகட்காகத் தரப்பட்ட சகல மணிக்கூடுகளையும் இன்றுதொடக்கம் 9 மணிக்கும் 01 மணிக்கும் இடையில் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 6, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1405)

## தலதா மாளிகைக்குப் பாதுகாப்பு

## நல்லூர், வண்ணைசிவன் மீது தாக்குதலா?

### வெகுஜன இயக்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஊரடங்கு வேளையில் மக்கள் தஞ்சமடைந்த ஆலயங்களான வண்ணை சிவன் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றைத் தாக்கிச் சேதம் விளைவித்தமை அடிப்படையான மதவழிபாட்டுரிமையை மீறிய செயலாகும்.

—இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் சோ. தேவராஜா விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் அறிக்கையில்:

கண்டி தலதா மாளிகைக்கு அரசு பாதுகாப்பு வழங்கிவரும் அதேவேளை இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவ ஆலயங்களை மாற்றாந் தாய் மனப்பான்மையுடன்—மிலேச்சத்தன அழிப்பு நடவடிக்கையில் அரச இராணுவம், தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## இராணுவத்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்து விநியோகம் ஆகியன தடைப்பட்டுள்ளது குறித்து புதுடில்லி அரசு கவலை தெரிவித்துள்ளது.

மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்காமல் இந்திய அரசுக்கு எதிரான கொள்கையை இலங்கை தீவிரப்படுத்தியுள்ளது.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## இந்திய...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் சில சக்திகள் ஈடுபட்டு உள்ளன.

இச் சக்திகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் இயங்குகின்றன.

இச் சக்திகள் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

இப்படி பாதுகாப்பு அமைச்சர் பந்த் தெரிவித்தார். (இ-எ)

## 11 மணி----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அரச அதிபரினால் வழங்கப்படும் விசேட கடிதத்துடன் வெள்ளைக் கொடிபறக்கவிடப்பட்ட லொறிகளில் காங்கேசன் துறைமுகத்துக்குள் செல்ல அனுமதி வழங்கப்படும்.

லொறிகள் காங்கேசன் துறைமுகத்துக்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகள் அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சி மக்களுக்கு அரசாங்கமே இவ்வாரம் நேரடியாக உணவுப் பொருள்களை வழங்கும் என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது. (இ-10)

## இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் டாக்டர் எம். சந்தோஷம் தெரிவித்திருக்கிறார்.

அத்தியாவசிய உணவுப்பண்டங்கள் இன்றி யாழ் குடாநாட்டுத் தமிழர் படும் அவதி குறித்து விடுத்த அறிக்கை ஒன்றிலேயே டாக்டர் சந்தோஷம் இவ்வேண்டுகோளை விடுத்தார். (உ-உ)

## குடாநாட்டில்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்குமுகமாக முன்கண்டவாறு திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

திரு. டிக்ஸிற் மேலும் சொன்னதாவது:

யாழ் குடா நாட்டைச் சென்று பார்க்க வருமாறு முறையான அழைப்பு நமக்குக் கிடைக்கவில்லை. யாழ் செல்ல சம்மதமா? என்று மட்டுமே இந்திய பாதுகாப்பதிகாரி கேட்கப்பட்டார்.

முறையான அழைப்பு விடுக்கப்படாமல், அழைப்பு நிராகரிக்கப்பட்டது என்று கூறுவது தவறு.

கனடா, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா உட்பட சில நாடுகளின் இராஜதந்திரிகளும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சிலரும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தியச் செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை.

இப்படி திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (இ-எ)

## பொதுமக்களைத்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொப்டர்களும் பொது மக்களை நோக்கி தாக்குதல்களை மேற்கொண்டன.

அன்று காலையே ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப்படுத்திய படையினர் பொதுமக்களைக் குறிப்பிட்ட பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடையுமாறு துண்டுப்பிரசுரம் மூலம் கோரிக்கை விடுத்தனர்.

### கோயில்கள் பாடசாலைகளில் தஞ்சம்

இதனை அடுத்து ஏராளமான பொதுமக்கள் கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்தனர்.

நானும் உடுப்பிட்டி தச்சப்பிள்ளையார் கோவிலில் தஞ்சமடைந்தேன். என்னுடன் 200 பேர் வரையில் இருந்தனர்.

பிற்பகல் நான்குமணி அளவில் உடுப்பிட்டி பகுதிக்கு வந்த பொம்மர் விமானங்கள் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்மீதும், உடுப்பிட்டி சந்தைமீதும் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் உடுப்பிட்டியில் உள்ள பல கடைகள் எரிந்து நாசமாகியதுடன் ஒரு சிறுமியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

உடுப்பிட்டி எங்கும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

### வெள்ளைக் கொடி

அதன் பின்னர் அன்று இரவோடிரவாக சென்று நெல்லியடி மூத்தவிநாயகர் ஆலயத்தில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டு தஞ்சமடைந்தோம்.

எனினும் காலையில் அப்பகுதிக்கு வந்த ஹெலிக்கொப்டர்கள் மூத்தவிநாயகர் ஆலயத்தின் மீதும் தாக்குதல் நடத்தின.

இதனால் அங்கு தஞ்சமடைந்திருந்த பலர் காயமடைந்தனர்.

நெல்லியடி அந்தோனியார் கோயிலும் சேதமடைந்தது.

நெல்லியடியில் உள்ள பல கடைகளும் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்களினால் எரியுண்டன.

கெருடாவில் பகுதியை முற்றுகையிட்ட இராணுவத்தினர் பல பொதுமக்களை வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

இராணுவத்தினர் புல்டோசர் மூலம் வீடுகள், கடைகள் என்பவற்றை உடைத்து நொருக்குகிறார்கள்.

எங்கும் ஒரே வெடிச் சத்தமும், வானூர்திகளின் சத்தமும் போர் நடக்கும் நாடு ஒன்றில் இருப்பதுபோன்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

### கெருடாவிலில் தலை, கை, கால் இல்லாத சடலங்கள்

கெருடாவில் பகுதியில் பல மனித சடலங்கள் தலையில்லாமலும், கை, கால்கள் இல்லாத நிலையிலும் இருப்பதாகச் சொன்னார்கள்.

இராணுவத் தாக்குதல்களில் தந்தையை இழந்த மகள், பிள்ளையை இழந்த தாயார், சகோதரனை இழந்த சகோதரிகள்— எங்கும் ஒப்பாரி ஓலங்கள் தான்.

இறந்தவர்களது சடலங்களைக் கூட ஒழுங்கான முறையில் அடக்கம் செய்ய முடியாததன் காரணமாக அந்தந்த இடங்களிலேயே பல சடலங்களை மக்கள் காவோலை போட்டுக் கொளுத்தியதையும் காணமுடிந்தது.

நெடியகாட்டில் உள்ள பிள்ளையார் கோவில், ரஞ்சனு படமாளிகை உட்பட பல கட்டடங்களும் இப் பகுதியில் உடைத்து நொருக்கப்பட்டுள்ளன.

வல்லைவெளியால் வர முடியாத காரணத்தாலேயே பல மைல்களைத் தாண்டி நான் நடந்து வந்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ-10)

## மேனிமினுக்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகளும் செய்தியாளர்களும் கொண்டுபோகப்பட்டனர்.

யாழ். மக்களுடன் பேசவோ, நிவாரண நிறுவனப் பிரதிநிதிகளுடன் உரையாடவோ இவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஹெலிக் கொப்டரில் வைத்து, இராஜதந்திரிகள், செய்தியாளர்களுக்கு இராணுவ ஜெனரல்கள் கொடுத்த விளக்கங்களுக்கும் இலங்கை அரசு கொழும்பில் தெரிவித்த விளக்கத்துக்கும் நிறைய முரண்பாடு உள்ளன.

யாழ் குடாநாட்டில் போர்வையால் போர்த்தது போன்ற (Carpet bombing) விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பது நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

அப்படியான தாக்குதலை நடத்தக்கூடிய ஆயுதவசதிகள் இலங்கை அரசிடம் இல்லை என்று கூறிவிட முடியாது.

--இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## நீத்தார் பட்டியல்

### சு. இரத்தினசவுந்தரம்மா

கோப்பாய் சு. இரத்தினசவுந்தரம்மா 31 - 5 - 1987 ஞாயிறு அன்று காலமானார். இவர் கோப்பாய் வடக்கு கந்தசுவாமிகோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்களின் மனைவியும் சு. சோமசுந்தரக் குருக்கள், சு. தேவ சேனபதிசர்மா, கெங்க சரோஜினி பூரணனந்த குருக்கள் [மட்டக்களப்பு] பத்மாவதி சுப்பிரமணியசர்மா [கிரிமலை] மங்களகௌரி சுந்தரேஸ்வரசர்மா [திருகோணமலை] கிரீஜாமணி திரியம்பகேஸ்வரசர்மா [மட்டக்களப்பு] ஆகியோரின் தாயும் ஆவார். இறுதிச் சடங்குகள் இன்று கோப்பாயில் 01. 06. 1987 (திங்கட்கிழமை) நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

சோ. சுப்பிரமணியக் குருக்கள்

(1406)

HORIZON ENTERPRISES

★ இடம்மாற்றம் ★

எமது அலுவலகம் தற்போதைய சூழ்நிலை காரணமாய் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது புதிய முகவரி:--

★ A. பத்மதாஸ் ★

இல: 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

எம்மிடம் எற்கனவே தொடர்பு கொண்ட அனைவரும் 05 - 06 - 1987 ஆம் திகதி எமது அலுவலகத்தில் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு
யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி:
NO 87-2/1 2 nd FLOOR,
KOLLUPITIYA LANE, COLOMBO-3.
Phone: 574000

இப் பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 01—06—1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at #292/2 Navalar Road, Jaffna on Monday June 01 198
Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org